ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2318/13 - 2023 පෙබරවාරි මස 06 වැනි සඳුදා - 2023.02.06

*2318/13 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ5/2013* (II)

### *(262 ஆம் அத்தியாயமான)* உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம்

*(262 ஆம் அத்தியாயமான)* உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 82ட என்னும் பிரிவின் நியதிகளின்படி, திசாநாயக்க முதியன்செலாகே தரங்க ஹர்ஷக பிரிய பிரசாத் திசாநாயக்க மற்றும் ஏனையோர்களையும் பிரதிவாதிகளாக்கி வனசிங்க முதியன்செலாகே சுனில் ஷாந்த வனசிங்க எனும் மனுதாரரினால் மொணராகலையில் உள்ள ஊவா மாகாண மேல் நீதிமன்றத்துக்கு தேர்தல் மனுவொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாதலாலும்;

அத்துடன், 01/2018 என்னும் இலக்கத்தையுடைய சொல்லப்பட்ட தேர்தல் மனு தொடர்பில் அக்கட்டளைச் சட்டத்தின் 82ய என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட, தேர்தல் நீதிபதியின் அறிக்கையானது அக்கட்டளைச்சட்டத்தின் 82ழ என்னும் பிரிவின் நியதிகளின்படி மாண்புமிகு சனாதிபதியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாதலாலும்;

ஆகவே, இப்பொழுது, அக்கட்டளைச்சட்டத்தின் 82ற என்னும் பிரிவின் நியதிகளின்படி, தேர்தல் நீதிபதியினது அறிக்கையின் பிரதியொன்று அரச வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென மாண்புமிகு சனாதிபதியவர்களால் பணிக்கப்பட்டுள்ளதனால், அத்தகைய அறிக்கையின் பிரதியொன்று இதன் கீழ் வெளியிடப்படுகின்றது.

மாண்புமிகு சனாதிபதியின் ஆணைப்படி,

**ஈ. எம். எஸ். பி. ஏக்கநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

2023, பெப்புருவரி 06.
மொணராகலை ஊவா மாகாண மேல் நீதிமன்றத்தில்,
மேலதிக மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.ஏ.திசாநாயக்கவின் முன்னிலையில்
வழக்கு இலக்கம் : தேர்தல் மனு 01/2018
திகதி : 2021.09.13

1A - G 38772 — 11 (2023/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 82ய என்னும் பிரிவின் நியதிகளின்படி தேர்தல் நீதிபதியின் அறிக்கை**

*மேற்சொல்லப்பட்ட வழக்கு இலக்கத்தின் கீழ் மொணராகலை ஊவா மாகாண மேல் நீதிமன்றத்துக் முன்வைக்கப்பட்ட தேர்தல் மனு பற்றிய விளக்கத்தின் தீர்மானம் 2021.09.13 ஆம் திகதி வழங்கப்பட்டது.*

*அந்த விளக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டு எண்பிக்கப்பட்ட நிகழ்வுகள் தொடர்பிலான தேர்தல் நீதிபதியின் அறிக்கை பின்வருமாறாக முன்வைக்கப்படுகின்றது:*

*விளக்கத்தின் முடிவின்மேல் என்னால் வழங்கப்பட்ட கட்டளைக்கான காரணங்கள் அத்தகைய கட்டளையில் விவரமாக விபரித்துக் கூறப்பட்டுள்ளன. அக்கட்டளையின் பிரதியொன்று இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அந்த விளக்கத்தில் எண்பிக்கப்பட்டவையும் மற்றும் எண்பிக்கப்படாதவையுமான நிகழ்வுகளைச் சாராம்சப்படுத்திக் கூறுவதன் மூலம் பின்வருமாறாக இவ்வறிக்கை முன்வைக்கப்படுகின்றது:*

*மொணராகலை பிரதேச சபைக்கான மதுருகெட்டிய தேர்தல் பிரதேசம் தொடர்பில் 2018.02.10 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்த திசாநாயக்க முதியன்செலாகே தரங்க ஹர்ஷக பிரிய பிரசாத் திசாநாயக்கவினால் புரியப்பட்டுள்ளவையாகச் சார்த்தப்பட்ட ஊழல் அல்லது சட்ட விரோத செயல்முறைகள் தொடர்பில் எண்பிக்கப்பட்ட வையும் மற்றும் எண்பிக்கப்படாதவையுமான நிகழ்வுகள் பின்வருமாறாகும்:*

*(அ) திசாநாயக்க முதியன்செலாகே தரங்க ஹர்ஷக பிரிய பிரசாத் திசாநாயக்க எனும் வேட்பாளர் அல்லது அவரது பிரதிநிதி, தேர்தல் மனுவில் 12*(i) (ii) *எனும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்டவாறு, வலிந்துதவும் அமைப்புகளுக்கு பணம், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றையும் அத்துடன் குறித்த சில வீடுகளுக்கு புதிய வீட்டு மின்சார இணைப்புகளையும் வழங்கியுள்ளார் என்பது விளக்கத்தில் எண்பிக்கப்பட்டுள்ளது.*

*(ஆ) தேர்தல் மனுவில் 13 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறு, மதுரு கெட்டிய ஐக்கிய மரணச் சடங்கு உதவிச் சங்கத்துக்கு பணம் வழங்குதல் மற்றும் ஒயில்/பாம் ரமணமயூர விளையாட்டுக் கழகத்துக்கும் பொருள்சார் உதவி வழங்குதல் ஆகிய சம்பந்தப்பட்ட தவறுகள், வேட்பாளர் திசாநாயக்க முதியன்செலாகே தரங்க ஹர்ஷக பிரிய பிரசாத் திசாநாயக்கவினால் அல்லது அவரது பிரதிநிதியால் புரியப்பட்டிருந்தன என்பது விளக்கத்தில் எண்பிக்கப்பட்டிருக்கவில்லை.*

*(இ) தேர்தல் மனுவில் 12*(iii) *ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறு, 2017.11.28 ஆம் திகதியில் அல்லது அதனை அண்மித்த திகதியில் மதுருகெட்டிய தேர்தல் பிரதேசத்திலுள்ள குறித்த சில வீடுகளுக்கு புதிய நீர் இணைப்புக்கள் வழங்குவதன் மூலம் இலஞ்சங்களை வழங்க முனையும் தவறு, திசாநாயக்க முதியன்செலாகே தரங்க ஹர்ஷக பிரிய பிரசாத் திசாநாயக்கவின் அறிவுடனும் சம்மதத்துடனும் அவரின் பிரதிநிதியொருவரான 812811401*V *என்னும் இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்டுள்ள சிறியாரத்ன அனுர ஷாந்த குமாரவினால் புரியப்பட்டிருந்தது என்பது எண்பிக்கப்பட்டுள்ளது.*

**ஆர். எஸ். ஏ. திசாநாயக்க**
தேர்தல் நீதிபதி,
மேலதிக மேல் நீதிமன்ற நீதிபதி - மொணராகலை.

*2021.09.13.*

EOG *02-0049*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*